# பழநி நகராட்சி

## 2018-2019ஆம் ஆண்டின்
## நிர்வாக அறிக்கை
## (ADMINISTRATION REPORT)

# பழநி நகராட்சி
# 2018-2019(01-04-2018 முதல் 31-03-2019) ஆம் ஆண்டின்
# நிர்வாக அறிக்கை

## முன்னுரை:

பழநி நகரம் , அருள்மிகு முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றாகும். இந்நகரம் வரலாற்றுச் சிறப்பும் புராணச் சிறப்பும் மிக்க நகரமாகும்.

## 1. அமைப்பும் மேலாண்மையும்

**1–1. அமைப்பு**: - இவ்வறிக்கை இந்நகராட்சியின் 128வது ஆண்டின் அறிக்கையாகும். தமிழகத்தின் தலைநகரிலிருந்து சுமார் 496 கிலோ மீட்டர் தொலைவில் கடல் மட்டத்திலிருந்து 320.56 மீட்டர் உயரத்தில் அமையப்பெற்றுள்ளது. இந்நகராட்சியின் பரப்பளவு சென்ற ஆண்டில் இருந்தது போலவே விஸ்தரிப்பு இன்றி 6.63 சதுர கிலோ மீட்டர் கொண்டதாக இருந்து வருகிறது. இந்நகராட்சியின் நிலை விவரம் பின்வருமாறு

| வ.எண். | நாள் முதல் | நிலை |
|---|---|---|
| 1 | 01–08–1886 | மூன்றாவது நிலை நகராட்சி |
| 2 | 01–11–1949 | இரண்டாவது நிலை நகராட்சி |
| 3 | 01–04–1973 | முதல் நிலை நகராட்சி |
| 4 | 01–02–1988 (அ,ஆ,எண். 1075 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14–12–88ன்படி) | தேர்வு நிலை நகராட்சி. |

**1-2. ஆட்சி வரம்பு.**

பழநி நகர் பகுதி, கோதைமங்களம் பகுதி, தட்டான்குளம், பகுதி சிவகிரிப்பட்டி பகுதி ஆகிய வருவாய் கிராமங்கள் இந்நகராட்சியின் எல்லைக்குள் அடங்கியதாகும். அறிக்கையாண்டில் நகராட்சி எல்லையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. ஆனால் நகராட்சியின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு சிவகிரிப்பட்டி ஊராட்சியை பழநி நகராட்சி எல்லைக்குட்படுத்தும் பொருட்டு 30/09/1987–ம் நாளைய 496(38) எண்ணுள்ள இந்நகர் மன்றத் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டது. சிவகிரிப்பட்டி ஊராட்சி இதற்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**1–3. மக்கள் தொகை**

| வ.எண். | மக்கட் தொகை கணக்கெடுப்பின் படி | ஆண் | பெண் | திருநங்கைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1991–ல் | 34771 | 34136 | – | 68907 |
| 2 | 2001–ல் | 33962 | 33269 | – | 67231 |
| 3 | 2011–ல் | 34842 | 35605 | 9 | 70456 |

## 2. நகராட்சி நிர்வாகம்

01–04–2018– முதல் 31–03–2019 வரை நகராட்சி ஆணையர்கள் தனிஅலுவலராக நியமிக்கப்பட்டனர்.

## 3. தேர்தல்

அரசாணை எண்.87 நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 01–01–2011படியும் 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும் இந்நகராட்சியில் 33 வார்டுகள் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒதுக்கீட்டின் விபரம் | வார்டுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | பெண்களுக்கு பொதுவானது | 6,11,12,16,17,18,22, 31,32 | 9 |
| 2 | தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு ( பெண்) | 13,33 | 2 |
| 3 | தாழ்த்தப்பட்டவர்களுக்கு (ஆண் (ம) பெண் (பொது) | 4,5,14 | 3 |
| 4 | பொதுவானவை | 1,2,3,7,8,9,10,15,19, 20,21,23,24,25,26, 27,28,29,30 | 19 |
| | **மொத்தம்** | | **33** |

## 4.நகர் மன்றக் கூட்டங்கள் மற்றும் குழுக் கூட்டங்கள்

2018–2019–ம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு கூட்டங்கள் கூட்டப்பட்டு பொருள்கள் முடிவு செய்யப்பட்டது.

| 01–04–2018 முதல் 31–03–2019 வரை | கூட்ட எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள் |
|---|---|---|
| சிறப்புக்கூட்டம் | – | – |
| அவசரக்கூட்டம் | – | – |
| சாதாரணக் கூட்டம் | 326 | 326 |
| மொத்தம் | 326 | 326 |

## குழுக்கூட்டங்கள்

| குழுக்கூட்டங்கள் 01–04–2018 முதல் 31–03–2019 | கூட்ட எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்கள் |
|---|---|---|
| 1. ஒப்பந்தக்குழு கூட்டம் | – | – |
| 2, வரிமேல்முறையீட்டுக் குழுக் கூட்டம் | – | – |
| 3, உள்ளூர்த் திட்டக்குழுமம் | – | – |

| | | |
|---|---|---|
| 4, நியமனக்குழுக்கூட்டம் | – | – |
| 5. திருவிழாக்கூட்டம் | – | – |
| மொத்தம் | – | – |

**5. நிலை குழுக்கள்**

இந்நகராட்சியில் நிலை குழுக்கள் அமைக்கப்பட்டு அறிக்கையாண்டில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொரு குழுவிலும் நகர் மன்றத் தலைவர், தலைவராகவும் மற்றும் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பொருட்களை முடிவு செய்வார்.

**6.நிர்வாக செயல்பாடுகள்**

**6-1 ஆணையாளர்**

அறிக்கையாண்டில் பணிபுரிந்த ஆணையர்கள்

| வ.எண் | பெயர் | காலம் |
|---|---|---|
| 1 | திரு.மு,ஜோதிக்குமார்<br>ஆணையாளர் | 01–04–2018 முதல் 31–08–2018 வரை |
| 2 | திரு.த.நாராயணன்<br>ஆணையாளர் | 31–08–2018 முதல் 31–03–2019 வரை |

**7. வழக்குகள்**:

அறிக்கையாண்டின் ஆரம்பத்தில் மொத்தம் 18 வழக்குகள் இருந்தன. அவற்றில் 13 வழக்குகள் முடிவுற்று விட்டன. அவற்றில் 5 வழக்குகள் மட்டுமே மதுரை உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது.

| வ. எண். | வகைப்பாடு | 1–4–16ல் ஆரம்ப நிலுவை | 2016–2017ல் வரப் பெற்றது | மொத்தம் | முடிக்கப் பட்டது | 31–3–17ல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி இனங்கள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் சார்பு நீதி மன்றம் | 46 | 1 | 47 | – | 47 |
| 2 | குத்தகை இனங்கள் சார்பு நீதிமன்றம், பழநி, மாவட்ட உரிமையியல் நீதி மன்றம், சென்னை / மதுரை உயர்நீதிமன்றம், மதுரை | 6 | 1 | 7 | – | 7 |
| 3 | – | – | – | – | – | – |
| | மொத்தம் | 52 | 2 | 54 | – | 54 |

**<u>8 அச்சடித்தல் மற்றும் படிவங்கள் – 2018–2019</u>**

இத்தலைப்பின் கீழ் ரூ. 5,00,000 அறிக்கை ஆண்டில் செலவிடப்பட்டது. நகராட்சியில் காப்பி பிரிண்டர் நகல் எடுக்கும் இயந்திரம் ( Xerox Machine ) மற்றும் 13 கணிப்பொறிகள் பயன்படுத்தி வருவதால் அச்சுக் கட்டணம் கணிசமாக குறைந்து உள்ளது.

**பொறியர் பிரிவு**

## குடிநீர் அபிவிருத்தி திட்டம் (JICA)

பழனி நகர மக்களுக்கும் நாள்தோறும் வந்து செல்லும் லட்சக்கணக்கான பக்தர்களுக்கும் நகராட்சி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பழனி நகராட்சிக்கு கீழ்க்கண்ட 2 குடிநீர் ஆதாரங்களில் இருந்து குடிநீர் பெறப்பட்டு வருகிறது.

| வ.எண் | இடத்தின் பெயர் | குடிநீர் அளவு |
|---|---|---|
| 1 | கோடைகால நீர்த்தேக்கம் (புளியமரத்து செட்) | 3.60 |
| 2 | நான்காவது குடிநீர் அபிவிருத்தி திட்டம் (பாலாறு பொருந்தலாறு அணை | 3.15 |

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இந்நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை 21.60 கோடியில் செயல்படுத்த அரசின் ஒப்புதல் பெறப்பட்டு தற்சமயம் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. மேற்காணும் திட்டம் நிறைவுபெரும் நிலையில் பழநி மக்களுக்கும் இந்நகருக்கு வருகை புரியும் இலட்சக்கணக்கான பக்தர்களுக்கும் தங்கு தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலும்.

**நிதி ஆதாரம்** **கோடியில்**

| | | |
|---|---|---|
| ஜப்பான் வங்கி கடன் | ரூ. | 12.96 (60 சதவிதம் |
| ஜப்பான் வங்கி மான்யம் | ரூ | 6.48 (30 சதவீதம்) |
| பொதுமக்கள் / உள்ளாட்சி அமைப்பு பங்கு | ரூ | 2.16 (10 சதவீதம்) |
| **மொத்தம்** | ரூ | 21.60 |

பம்பிங் மெயின் 10.100 கி.மீ. மற்றும் பகிர்மான குழாய்கள் 23.101 கி.மீ. பதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ. 16.95 கோடி நகராட்சி மூலம் தொகை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 85% சதவீதப் பணிகள் முடிவு பெற்றுள்ளது. மீதமுள்ள பணிகளை உடன் முடித்துக் கொடுக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் , திண்டுக்கல் அவர்களால் நடவடிக்கையில் உள்ளது.

**பாதாளச் சாக்கடைத் திட்டம் (UGSS)**

இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத்திட்டத்தை நகர் முழுமைக்கும் சுமார் 104.54 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக Stup Consultants Pvt., Ltd., பெங்களூரு நிறுவனம் மூலம் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்யப்பட்டு திருத்திய கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டவுடன் பாதாள சாக்கடை

திட்டப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணி முடிவடைந்த உடன் பாதாள சாக்கடைத்திட்டப்பணி நிறைவேற்றப்பட உள்ளது. அரசாணை எண். 492/ MA & WS (MA2) Dept. date 19–09–2013.

**ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் (IHSDP)**

ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் குடியிருப்பு மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் 1636.47 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்குட்பட்ட குடிசைப் பகுதிகளில் சாலைகள் , மழைநீர் வடிகால், குடிநீர் பணிகள், மற்றும் பாலங்கள் போன்ற உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் 874 குடியிருப்புகள் கட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்பில் 21 பணிகளுக்கு ரூ. 515.13 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. 874 குடியிருப்புகளில் 874 வீடுகளுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இதில் 382 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 492 குடியிருப்பில் பல்வேறு நிலைகளில் பணி நடைபெற்று வருகிறது. உட்கட்டமைப்பில் 21 பணிகளில் 16 பணிகள் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**9– பூங்காக்கள்**

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட இடங்களில் நகராட்சிக்குச் சொந்தமான பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

| வ.எண். | வார்டு எண் | பூங்காவின் அமைவிடம் | பரப்பளவு சதுர மீட்டரில் |
|---|---|---|---|
| 1 | 13 | இராஜாஜி சாலை (இராஜகோபால் பூங்கா) | 9876–சமீ |
| 2 | 25 | இராஜா நகர் (மகாகவி பாரதியார் பூங்கா) | 1207.7–சமீ |
| 3 | 30 | திலகர் வீதி (அறிஞர் அண்ணா பூங்கா) | 929.36 |
| 4 | 25 | திருவள்ளுவர் ரோடு (சுப்பிரமணிய சிவா பூங்கா) | 1207.71 |
| 5 | 26 | காளிமுத்து நகர் (ஜீவானந்தம் பூங்கா) | 706.31 |
| 6 | 31 | இட்டேரி சாலை | 706.31 |

**வாசகசாலை**

இந்நகராட்சியிலிருந்து கீழ்க்காணும் விபரப்படி 6 வாசகசாலை பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | நூலகம் பெயர் | அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1 | ஜீவா நூலகம் | புது தாராபுரம் ரோடு |
| 2 | வ.உ.சி நூலகம் | மார்க்கெட் |
| 3 | குறும்பபட்டி நூலகம் | குறும்பபட்டி |
| 4 | திருவள்ளுவர் வாசகசாலை | சண்முகபுரம் |
| 5 | மூப்பனார் நூலகம் | தேரடி |
| 6 | கலைஞர் படிப்பகம் | கோட்டைமேட்டுத் தெரு |

**ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (IUDM) 2016–2017**

- இத்திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் சேகரமாகும் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் (Bio Methanation Plant) ரூ. 90.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2016–2017ன் கீழ் நகராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்ட ரூ.3.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிகள் 80% சதவீதம் முடிவு பெற்றுள்ளது.
- திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–2017ன் கீழ் 14 பணிகளுக்கு ரூ. 485.50 லட்சத்திற்க பெறப்பட்டுள்ளது. இதில் ரூ. 436.95 மானியமாகவும் ரூ. 48.55 லட்சம் பொதுநிதியில் செலவு செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டு 9 பணிகள் முடிவு பெற்றுள்ளது.

**தெருவிளக்குகள்**

2018–2019–ம் ஆண்டில் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த மொத்த மின் விளக்குகளின் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு

| வ.எண். | வகைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உயர்மின் கோபுர விளக்கு ( Highmast) | 110 |
| 2 | குழல் விளக்குகள் 40 வாட்ஸ் | 1154 |
| 3 | சோடியம் ஆவி விளக்குகள் 150 வாட்ஸ் | 249 |
| 4 | 1 x 24 CFL விளக்குகள் | 480 |
| 5 | 4 x 24 CFL விளக்குகள் | 1221 |
| | மொத்தம் | **3214** |

தெரு விளக்கு பராமரிப்பு பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு சன்வியு சிஸ்டம் கார்பரேஷன் நிறுவனம் மூலம் தெரு விளக்குகள் பராமரிப்பு பணி நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>சாலைகள் :</u>**

அறிக்கையாண்டு முடிவில் கீழ்க்கண்ட பல்வேறு சாலைகள் பராமரிக்கப்பட்டது.

| வ.எண் | சாலைகளின் வகை | சாலைகளின் நீளம் | அறிக்கையாண்டில் அமைக்கப்பட்ட சாலைகள் ( மேம்படுத்துதல்) | 31–03–2018–ல் சாலைகளின் நீளம் |
|---|---|---|---|---|
| 1 | சிமெண்ட் சாலைகள் | 26.997 | 0.200 | 26.997 |
| 2 | தார் சாலைகள் | 15.747 | 0.875 | 15.747 |
| 3 | கருங்கல் சாலைகள் | 0 | 0 | 0 |
| | மொத்தம் | 42.744 | 1.075 | 42.744 |

2018–2019–ம் ஆண்டில் சாலை வேலைகளுக்காக பொது நிதியில் 15.00 லட்சம் மேற்கொள்ளப்பட்டது.

நகராட்சியின் பராமரிப்பில் உள்ள சாலைகள் யாவும் அவ்வப்போது பழுது பார்க்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்குச் சொந்தமான ஜல்லிகற்கள் தோண்டியெடுக்கும் இடம் இல்லை.

**<u>திட்டப்பணிகள் விபரம்</u>**

1. சட்டமன்ற உறுப்பினர் (திரு.ஐ.பி.செந்தில்குமார் அவர்கள்) தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–2019 மொத்தம் 19 பணிகள் முடிவுற்றது. மதிப்பீட்டுத் தொகை ரூ.23.00/– இலட்சம்
2. தேசிய நகர்புற நலத்திட்டம் 2018–2019–ன் கீழ் நகர் ஆணை எண்.714/4,5 பாய்கடை, படிப்பாரை காளியம்மன் கோவில் அருகில் நகர்புற சுகாதார நிலையம் அமைக்கும் பணி மதிப்பீட்டுத் தொகை ரூ.42.00/– இலட்சத்தில் முடிவு பெற்றுவிட்டது.
3. தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் ரூ.135.00/– இலட்சத்திற்கு பணிகள் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.
4. சாலைமேம்பாட்டு திட்டம் மற்றும் 14–வது மான்யக்குழு திட்டத்தின் கீழ் ரூ.1890.00/– இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>குடிநீர் விநியோக நிலை :-</u>**

**<u>கோடைகால நீர்த்தேக்கம்</u>**

பழனி நகருக்கு கொடைக்கானல் குடிநீர் திட்டத்தின் மூலம் 6.50 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கோடைகால நீர்த்தேக்கத்தில் மூன்று திறந்த வெளி ராட்சச கிணறுகளும், நான்கு ஆழ்குழாய் கிணறுகளும் கூடுதலாக குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது.

**<u>பாலாறு குடிநீர் திட்டம் :-</u>**

4-வது குடிநீர் அபிவிருத்தித் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. தற்போது இத்திட்டத்திலிருந்து நகருக்கு 3 மில்லியன் லிட்டர் தினமும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் 0.6 மில்லியன் லிட்டர் குடிநீர் சிவகிரிப்பட்டி கிராமப் பஞ்சாயத்து பகுதிக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**III) <u>தலைமை நீர்த்தேக்கம் :-</u>**

| | | | |
|---|---|---|---|
| 1) | கொடைக்கானல் திட்டம் | : | தடுப்பு அணை |
| | அமைந்துள்ள இடம் | : | கொடைக்கானல் மலைப்பகுதி |
| | நீளம் | : | 30 மீட்டர் |
| | உயரம் | : | 3 மீட்டர் |
| | பாலாறு திட்டம் | : | பாலாறு அணை |
| | தற்போதைய நீர்மட்டம் | : | 28.00 அடி |
| | பாலாறு நீர்தேக்கத்தின் கொள்ளளவு | : | 1524 MCFT |
| 2) | பிரதான குழாய் | : | 7 கி.மீ |
| | குழாயின் அளவு தன்மை | : | இயற்கை உந்து விசை ( S.S.Tank) |
| | சுத்திகரிக்கப்படாத குடிநீர் ஏற்றும் மின் மோட்டாரின் உந்து விசை அளவு | : | 75 குதிரை திறன் |

| | | | |
|---|---|---|---|
| 3) | பிரதான குழாய் கோடைக்கால நீர்த்–<br>தேக்கத்திலிருந்து பழனி வரை | : | 11 கி.மி. |
| | கோடைக்கால நீர்த்தேக்கத்தின்<br>கொள்ளளவு | : | 165.90 மில்லியன் |
| | அதிகப்படியாக தேக்கும் நீர்மட்டம் | : | 3.6 மீட்டர் |
| | பாலாறு தலைமை நீர்த்தேக்கத்திலிருந்து<br>பாலாறுகளுக்கு வரும் குழாயின் நீளம்<br>குழாயின் அளவு | : | 8.90 கி.மீ<br>400 மி.மீ.ஏ.சி.பைப். |

4) <u>குடிநீர் விநியோக முறை</u>

| | | | |
|---|---|---|---|
| | குடிநீர் விநியோக பகுதிகளின் எண்ணிக்கை | : | 7 |
| | மேல்நிலைத் தொட்டிகளின்<br>எண்ணிக்கைகளும்,<br>கொள்ளளவுகளும் | : | 45 லட்சம் லிட்டர். |
| 1. | திண்டுக்கல் ரோடு | : | 6.00 இலட்சம் லிட்டர் |
| 2. | திண்டுக்கல் ரோடு | : | 5.00 ,, |
| 3. | தாலுகா ஆபீஸ் | : | 12.50,, |
| 4. | சிவகிரிப்பட்டி | : | 12.50 ,, |
| 5. | லட்சுமிபுரம் | : | 1.20 ,, |
| 6. | அடிவாரம் | : | 5.80 ,, |
| 7. | மேற்கு ரதவீதி | : | 2.00 „ |
| 5) | மொத்த குடிநீர் அளவு (தினசரி) | : | 8.00 மில்லியன் லிட்டர்கள் |
| | கோடைகால நீர்த்தேக்க இயற்கை | | |
| | உந்துவிசை முறை | : | 24 மணி நேரம் |
| | பாலாறு திட்டம் | : | 24 மணி நேரம் |
| | பயன்பெறும் தெருக்கள் | : | 290 |

**<u>குடிநீர் விநியோகிக்கும் மொத்தக் குழாய்களின் நீளம் :</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | பழைய திட்டம் | : | 53.29 கி.மீ |
| 2. | புதிய திட்டம் | : | 18.69 கி.மீ |
| | மொத்தம் | : | 71.98 கி.மீ |

**<u>6) குடிநீர் விநியோகம் செய்யும் கால அளவு :</u>**

| தினசரி | வறட்சிக் காலம் | தற்போது விநியோகம் |
|---|---|---|
| 2 மணி | 4 நாள் விட்டு 1 நாள் | 3 நாளைக்கு ஒருமுறை |

| | | | |
|---|---|---|---|
| 7. | வறட்சிக் காலங்களின் எதிர்நோக்கும் நீரின் அளவு (2016) | : | 1.80 மீ |
| 8. | வறட்சிக் காலங்களில் எதிர்நோக்கும் குடிநீர் விநியோக அளவு (மி.லி) | : | 6 மி.லி |
| 9. | அடிகுழாய்களின் எண்ணிக்கை | : | 61 |
| | | | எண்ணிக்கை அளவு (மி.லி) |
| 10) | கூடுதலாக விநியோகம் செய்யப்படும் நீரின் அளவு | : | -- |
| 11) | அடிகுழாய் மூலம் | : | 0.07 MLD |
| 12) | ஆழ்குழாய்களில் மின் மோட்டார் பொருத்தி சப்ளை | : | 0.60 MLD |
| 13) | லாரி மூலம் விநியோகம் | : | 12 (ஒரு நாளைக்கு 6 டிரிப்புகள்) |

**14) <u>குடிநீர் விநியோகம் மற்ற முறையில் ஏற்பாடு செய்ததன் விவரம் :</u>**

a) கிணறுகள் மூலம் விநியோகம் செய்தல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திறந்த வெளி கிணறு | : | 3 |
| 2. | ஆழ்குழாயில் மின்மோட்டார் பொருத்தி விநியோகம் ( நீரேற்று நிலையம் | : | 3 |

**15) <u>பொதுக் குழாய்கள்</u>**

| | | |
|---|---|---|
| பொதுக் குழாய்களின் எண்ணிக்கை | : | 289 |
| பொதுக்குழாய் மூலம் விநியோகம் | : | 1.90 லட்சம் லிட்டர் |
| பொதுக்குழாயின் மூலம் பயன்பெறும் மக்கள் | : | 14600 |
| குடிநீர் குழாய் வீட்டு இணைப்புக்கள் | : | 8654 |

**16) <u>வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புக்களின் எண்ணிக்கை</u>**

| இணைப்பின் தரம் | மொத்தம் | விநியோகம் செய்யும் நீரின் அளவு |
|---|---|---|
| வீட்டு உபயோகம்<br>வணிக உபயோகமும் சேர்த்து | | 550 லி. ஒரு குடும்பத்திற்கு ஒரு நாள் வீதம் (93 லி ஒரு நபர் ஒரு நாள் வீதம்) நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 90 LPCD வழங்கப்படுகின்றது. |

<u>குடிநீர் கட்டணம் 1000 லிட்டருக்கு கீழ்க்கண்டவாறு வசூலிக்கப்படுகிறது.</u>

1) ரூ. 300/— வீதம் வீட்டு குடியிருப்பிற்கும்

2) ரூ.600/— வீதம் (வியாபார நிமித்தம், தொழிற்சாலை பயன்)

மேலும் இவ்விணைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு வைப்புத் தொகை வசூலிக்கப்படுகிறது.

1) வீட்டுக் குடிநீர் இணைப்பிற்கு ரூ.6000/—
2) தொழிற்சாலை குழாய், வியாபார குழாய் ரூ.12,000/—

மேலும் குடிநீர் விநியோகத்திற்காக பிரதான குழாய் இல்லாத தெருக்களுக்கு மற்றும் திருவிழாக் காலங்களிலும் 2 லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது.

## 10 நகரமைப்பு பிரிவு

**பொது**
**நகரமைப்பு பணியாளர்கள் விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | நகரமைப்பு அலுவலர் | : | 1 |
| 2 | நகரமைப்பு ஆய்வர்கள் | : | 1 |
| 3 | சங்கிலியாளர்கள் | : | 2 |
| 4 | உதவியாளர் | : | 0 |
| 5 | இளநிலை உதவியாளர் | : | 0 |
| | | | 4 |

## 11 நிலம் வகைப்படுத்துதல்

**முழுமைத் திட்டம் (MASTER PLAN)**

| | | | |
|---|---|---|---|
| அ) | முழுமைத் திட்டம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட விவரம் | : | அரசாணை எண். 232 / வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.19–02–1991 |
| ஆ) | தமிழ்நாடு அரசுப் பதிவிதழில் வெளியிடப்பட்ட விவரம் | : | பாகம் 2, பிரிவு 1 , பக்கம் 314, நாள். 15–05–1991 |
| இ) | மறு ஆய்வு | : | தற்போதைய வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு முழுமைத் திட்டம் புதுநிலைப் படுத்த நடவடிக்கை மெற்கொள்ளப்பட்டுள்ளது. |
| ஈ) | முழுமைத்திட்டம் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன் பிரிவு 24(4) ன் கீழ் மறு ஆய்வு அரசாணை விபரம் | : | அரசாணை எண்.147, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள். 31–3–99ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. |
| 2 | ஆலோசனை ஆட்சேபணைகள் | : | தமிழ்நாடு அரசிதழில் பகுதி 6 பிரிவு 4ல் 29.01.2003ல் பிரசுரிக்கப்பட்டது. இதே விவரங்கள் திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் எண். 2, பக்கம் 7ல் 10–02–2004ல் மறு பிரசுரம் செய்து ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 12 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள்

பழநி நகருக்கான உள்ளூர் திட்டப் பகுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட நான்கு விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளடஙகியதாகும்.

- புகைவண்டி நிலைய விரிவு அபிவிருத்தித் திட்டம்
- அடிவாரம் விரிவு அபிவிருத்தித் திட்டம்
- அடிவாரம் மேற்கு விரிவு அபிவிருத்தித் திட்டம்
- ஹரிபுரம் விரிவு அபிவிருத்தித் திட்டம்.

**<u>12–1 புகை வண்டி நிலைய அபிவிருத்தித் திட்டம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ) | திட்டப்பகுதி எல்லை | | |
| | வடக்கு | – | ரயில்வே லயன் |
| | தெற்கு | – | திண்டுக்கல் சாலை |
| | கிழக்கு | – | நகராட்சி எல்கை |
| | மேற்கு | – | புது தாராபுரம் சாலை |
| ஆ) | திட்டப்பகுதியில் பரப்பளவு | – | 246 ஏக்கர். |
| இ) | நகர் ஊரமைப்பு இயக்குநர் | – | ந.க.எண்.2338/87/டி2 |
| ஈ) | அரசுப் பதிவிதழில் வெளியான | – | பாகம் 4, பிரிவு 1 |
| | விவரம் | – | நாள். 04–07–1990 |
| உ) | மறு ஆய்வு விவரம் | – | ஒப்புதலளிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டபடியால் தற்போதைய வளர்ச்சியினை கருத்திற் கொண்டு திட்டத்தைப் புது நிலைப்படுத்தி நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்கள் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன் பிரிவு 33 டிபி2, நாள். 23–09–2002ல் ஒப்புதல் வழஙகியுள்ளார்கள். |
| ஊ | பிரசுர விவரம் | : | தமிழ்நாடு அரசிதழில் எண். 351ல் பகுதி 6 பிரிவு 1ல் பக்கம் 496ல் 04–09–2002ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.<br>2) மாவட்ட அரசிதழில் 10–12–02ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. |
| எ | தற்போதைய நிலை | : | ஆலோசனைகள், ஆட்சேபணைகள் பெறப்பட்டு உள்ளூர்த் திட்டக்குழுமம் ஒப்புதலுடன் 16–09–2003ல் இறுதி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நகர் ஊரமைப்பு ஆணையரால் 24–05–2006ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. |

- **<u>12–1 அடிவாரம் விரிவு அபிவிருத்தித் திட்டம்</u>**

| | | | |
|---|---|---|---|
| அ) | திட்டப்பகுதி எல்லை | | |
| | வடக்கு | – | திண்டுக்கல் சாலை |
| | கிழக்கு | – | நகராட்சி எல்லை |
| | மேற்கு | – | அடிவாரம் சன்னதி வீதி |
| | தெற்கு | – | வடக்கு கிரிவீதி |
| ஆ) | திட்டப்பகுதியில் பரப்பளவு | – | 168.45 ஏக்கர் |
| இ) | நகர் ஊரமைப்பு இயக்குநர் | – | ந.க.எண்.20717/78/டி2 நாள். 11–04–1979 |
| ஈ) | அரசுப் பதிவிதழில் வெளியான விவரம் | – | பாகம் 4, பிரிவு 1<br>நாள். 16–05–1979 |
| உ) | மறு ஆய்வு விவரம் | – | தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ன் பிரிவு 33(1) ன் கீழ் மறு ஆய்வு செய்து நகர் ஊரமைப்பு |
| ஊ | பிரசுர விவரம் | : | 1. தமிழ் நாடு அரசிதழில் பகுதி 6 பிரிவு 1–ல் 11–04–2001–ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.<br>2. மாவட்ட அரசிதழில் 10–12–2002–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. |
| எ | தற்போதைய நிலை | : | ஆட்சேபணை மற்றும் ஆலோசணைகள் பெறப்பட்டு இறுதி ஒப்புதலுக்கு<br><br>உத்திரவு எதிர் நோக்கப்பட்டுள்ளது |

- **<u>12–1 அடிவாரம் மேற்கு விரிவு அபிவிருத்தித் திட்டம்</u>**

| | | | |
|---|---|---|---|
| அ) | திட்டப்பகுதி எல்லை | | |
| | வடக்கு | – | வையாபுரிக் குளம் மற்றும் அடிவாரம் ரோடு |
| | கிழக்கு | – | சன்னதி வீதி |
| | மேற்கு | – | வையாபுரிக் குளம் |
| | தெற்கு | – | வையாபுரிக் குளம் |
| ஆ) | திட்டப்பகுதியில் பரப்பளவு | – | **52.14** ஏக்கர் |
| இ) | நகர் ஊரமைப்பு இயக்குநர் | – | ந.க.எண்.**32305/78**/டி**2** நாள். **19–11–1979** |
| ஈ) | அரசுப் பதிவிதழில் வெளியான விவரம் | – | பாகம் **4**, பிரிவு **1**<br>நாள். **06–02–1980** |
| உ) | மறு ஆய்வு விவரம் | – | தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் **1971**–ன் பிரிவு **33(1)** ன் கீழ் மறு ஆய்வு செய்து நகர் ஊரமைப்புச் சிறப்பு ஆணையர் , சென்னை அவர்களால் ந.க.எண்.**32820/99**/டிபி**2** நாள். **07–12–2001**–ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. |
| ஊ | பிரசுர விவரம் | : | **1.** தமிழ் நாடு அரசிதழில் பகுதி **6** பிரிவு **1**–ல் **30–01–2002**–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.<br>**2.** மாவட்ட அரசிதழில் **10–12–2002**–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. |
| எ | தற்போதைய நிலை | : | ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் பெறப்பட்டு **16–09–2003**–ல் இறுதி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உத்திரவு எதிர் நோக்கப்பட்டுள்ளது |

- **12–1 ஹரிபுரம் விரிவு அபிவிருத்தித் திட்டம்.**

| | | | |
|---|---|---|---|
| அ) | திட்டப்பகுதி எல்லை | | |
| | வடக்கு | – | கவுண்டர் இட்டேரி சாலை |
| | கிழக்கு | – | புது தாராபுரம் ரோடு |
| | மேற்கு | – | பழைய தாராபுரம் ரோடு |
| | தெற்கு | – | சுப்பிரமணியபுரம் ரோடு |
| ஆ) | திட்டப்பகுதியில் பரப்பளவு | – | 82.88 ஏக்கர் |
| இ) | நகர் ஊரமைப்பு இயக்குநர் | – | நகர் ஊரமைப்பு இயக்குனர் ந.க.எண்.31315/76/பி2 நாள். 04–08–1978 |
| ஈ) | அரசுப் பதிவிதழில் வெளியான விவரம் | – | நாள். 06–09–1978 பாகம் 4, பிரிவு 1 |
| உ) | மறு ஆய்வு விவரம் | – | தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ன் பிரிவு 33(1) ன் கீழ் மறு ஆய்வு செய்து நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் , சென்னை அவர்களால் ந.க.எண்.16866/99/டிபி1 நாள். 23–04–2002 இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. |
| ஊ | பிரசுர விவரம் | : | 1. தமிழ் நாடு அரசிதழில் பகுதி 6 பிரிவு 1–ல் 04–09–2002–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.<br>2. மாவட்ட அரசிதழில் 10–12–2002–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. |
| எ | தற்போதைய நிலை | : | ஆலோசணைகள் பெறப்பட்டு உள்ளூர்த் திட்டக்குழும ஒப்புதலுடன் 16–09–2003–ல் இறுதி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உத்திரவு எதிர் நோக்கப்பட்டுள்ளது |

**12–2. அபிவிருத்திக் கட்டணங்கள்**

நகராட்சிப் பகுதியில் கட்டுமானப் பணிகள் மற்றும் மனை அபிவிருத்தி பணிகளக்காக உள்ளூர்த் திட்டக் குழுமத்தால் அபிவிருத்திக் கட்டணங்கள் ஆகிவிட்டதால், அரசாணையின்படி, கட்டணங்கள் திருத்தியமைத்து அரசுககு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதில் நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்கள் ந.க. எண். 26542/01/எம்பி.2, நாள். 24–10–2002ல் கட்டணங்களை உயர்த்திட இசைவு தெரிவித்து உத்திரவு பெறப்பட்டு, அரசிதழில் பிரசுரம் செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது.

## 12–3 நகரளவைப் பணிகள்.

1908ம் ஆண்டிலிருந்து நகரளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இறுதியாக 1970 மற்றும் 1996ம் ஆண்டுகளில் மறு அளவை செய்யப்பட்டு ஆவணங்கள் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தனியார் இடங்களை அளவை செய்தல், புலப்பட நகல் வரைபடங்கள் தயார் செய்து வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணிக்கான பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கான ஊதியத்தின் 2/3 பங்கு நகராட்சியிலிருந்து வழங்கப்படுகிறது.

**பணியாளர்கள் விவரம்.**

1) நகர் சார் ஆய்வாளர் – 1
2) புல உதவியாளர் – 1

## 12–4 ஆக்கிரமிப்புக்கள்.

மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடத்தப்படும் ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கான இயக்கு குழு கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் 49 தற்காலிக ஆக்கிரமிப்புக்கள் அவ்வப்போது அகற்றப்படுகிறது.

## 12–5 கட்டிட விண்ணப்பங்கள் ( 01–04–2018 முதல் 31–03–2019 வரை)

1) பெறப்பட்ட கட்டிட விண்ணப்பங்கள் – 130
2) அனுமதிக்கப்பட்ட வரைபடங்களின் எண்ணிக்கை – 113
3) அனுமதிக்கப்படாத வரைபடங்களின் எண்ணிக்கை – 17
4) நிலுவை – –
5) அனுமதியில்லா கட்டிடங்களின் எண்ணிக்கை – 13

## 12–6 நகரமைப்பு வருவாய்

நகரமைப்புப் பிரிவில் கீழ்க்ககண்ட இனங்களிலிருந்து வருவாய் கிடைக்கப்பெறுகிறது. இவ்வாணிடின் வருவாய் கடந்த ஆண்டைவிட கூடுதலாக கிடைத்துள்ளது.

| வ. எண் | உரிமங்களின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கட்டிட உரிமையாளர் கட்டணம் | 290655 |
| 2 | அபிவிருத்திக் கட்டணம் | 59709 |
| 3 | கட்டிடப் பொருள்கள் சேமிப்புக் கட்டணம் | 65610 |
| 4 | கட்டிட வரைப்படம் கட்டணம் | 28250 |
| | மொத்தம் | 444224 |

## 13– கல்வி

### 13–1 ஆரம்பப்பள்ளிகள்

| வ.எண். | வார்டு எண். | தனியார் பள்ளிகள் |
|---|---|---|
| 1. | 1 | நவவீர செங்குந்தர் ஆரம்பப்பள்ளி |
| 2. | 6 | பீட்டர் டேவிட் அறிவாலயம் ஆரம்பப்பள்ளி |
| 3. | 9 | இராஜரத்தினம் ஆரம்பப்பள்ளி |
| 4. | 11 | சி.எஸ்.ஐ ஆரம்பப்பள்ளி |
| 5. | 23 | குருகுலம் |
| 6. | 29 | திருவள்ளுவர் ஆரம்பப்பள்ளி |
| 7. | 31 | அருள்மிகு தண்டாயுபாணி ஆரம்பப்பள்ளி |
| 8. | 13 | ஆர்.சி. ஆரம்பப்பள்ளி |

**ஆரம்பக் கல்வி**

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட நான்கு நகராட்சி ஆரம்பப்பள்ளிகள் பராமரிக்கப்பட்டு வந்ததில் 2 பள்ளிகள் மாவணவர் வருகை குறைவால் மூடப்பட்டது.

| வ.எண். | வார்டு எண். | ஆரம்பப்பள்ளிகளின் விவரம் |
|---|---|---|
| 1. | 2 | அண்ணா பவளவிழா பள்ளி மாணவர் குறைவால் மூடப்பட்டது |
| 2. | 2 | கிழக்கு ரத வீதி |
| 3. | 4 | டாக்டர் அம்பேத்கார் ஆரம்பப்பள்ளி மாவணவர் வருகை குறைவால் மூடப்பட்டது |
| 4 | 7 | பாரதி ஆரம்பப்பள்ளி |

**சத்துணவு**

### 13–2 நடுநிலைப்பள்ளி

இந்நகராட்சிப் பகுதியில் மூன்று நகராட்சி நடுநிலைப் பள்ளிகள் உள்ளன. அவை

**நகராட்சி நடு நிலைப்பள்ளிகள்**

| வ.எண். | நடுநிலைப்பள்ளிகள் | வார்டு எண். |
|---|---|---|
| 1. | அடிவாரம் நடுநிலைப்பள்ளி | 11 |
| 2. | பெரியகடை வீதி நகராட்சி நடுநிலைப்பள்ளி | 20 |
| 3. | சண்முகபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி | 26 |

| வ.எண். | வார்டு எண். | நடுநிலைப்பள்ளிகள் |
|---|---|---|
| 1. | 7 | கான்வெண்ட் நடுநிலைப்பள்ளி |
| 2. | 11 | சி.எஸ்.ஐ வாக்மேன் நடுநிலைப்பள்ளி |
| 3. | 30 | திருவள்ளுவர் நடுநிலைப்பள்ளி |

### 13–3 உயர்நிலைப்பள்ளிகள்

| வ.எண். | வார்டு எண். | தனியார் உயர்நிலைப்பள்ளிகள் |
|---|---|---|
| 1. | 19 | மதனிசா முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி |
| 2. | 7 | சிறுமலர் உயர்நிலைப்பள்ளி |

**13–4–1 மேல்நிலைக்கல்வி அரசினர் பள்ளி**

| வ.எண். | வார்டு எண். | மேல்நிலைக் கல்வி |
|---|---|---|
| 1. | 26 | நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி |
| 2. | 6 | அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி |

**13–4–2 தனியார் மெட்ரிக்குலேசன் பள்ளிகள்**

| வ.எண். | வார்டு எண். | தனியார் மெட்ரிக்குலேசன் பள்ளிகள் |
|---|---|---|
| 1. | 11 | கென்னடி மெட்ரிக்குலேசன் பள்ளி |
| 2. | 26 | பாரத் வித்யாபவன் மெட்ரிக்குலேசன் பள்ளி |
| 3 | 32 | கார்த்திக் வித்யா மந்தீர் மெட்ரிக்குலேசன் பள்ளி |

**தனியார் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளிகள்**

| வ.எண். | வார்டு எண். | தனியார் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளிகள் |
|---|---|---|
| 1. | 5 | செயின் பீட்டர் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி |
| 2. | 7 | தேவி மெட்ரிக்குலேசன் பள்ளி |
| 3 | 20 | துர்க்கா மெட்ரிக்குலேசன் பள்ளி |
| 4. | 22 | ஆர்மின் மெட்ரிக்குலேசன் பள்ளி |
| 5. | 25 | ஸ்டாண்டர்டு மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி |
| 6. | 25 | விவேகானந்தா வித்யாலயா பள்ளி |
| 7. | 27 | அருள்மிகு பழனி ஆண்டவர் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி |
| 8 | 28 | அக்ஷயா மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி |
| 9. | 29 | சுவாமி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி |

**13–5 இடவசதிகளும் கருவிகளும்**

நகராட்சி எல்லைக்குள் அரசினரால் நடத்திவரும் **6** நகராட்சி பள்ளிகளும் சொந்தக் கட்டிடங்களில் உள்ளது.

அறிக்கையாண்டில் நகராட்சி ஆரம்பப் பள்ளிகளின் மராமத்து செலவினங்களுக்கு மற்றும் கூடுதல் கட்டிடங்களுக்கு மான்யம் ஏதும் பெறப்படவில்லை.

மேல்நிலைப்பள்ளி ஒன்று நகராட்சியால் பராமரிக்கப்பட்டதை **01–04–1990** முதல் அரசுக்கு மாற்றப்பட்டது பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்று அரசினரால் நடத்தப்பட்டு வருகிறது.

**9.142** ஏக்கர் பரப்புள்ள நல்ல ஆரோக்கியமான இடத்தில் நகராட்சி மேல்நிலைப்பள்ளி அமைந்துள்ளது. அறிக்கையாண்டில் பள்ளிக்கு போதுமானதாக இடசதியும், காற்றோட்டமும்

வெளிச்சமும் இருந்தது. பள்ளியில் மின்சார விளக்குகள் உள்ளன. மாணவர்களுக்கு போதுமான விளையாட்டு இடம் உள்ளது.

அரிஜன மாணவர்கள் விடுதி ஆண்களுக்கு ஒன்றும், பெண்களுக்கு ஒன்றும் நகரில் அரசினரால் நடத்தப்பட்டு வருகிறது. பயிற்சி பெற்ற அதிகாரியின் கீழ் 100 மாணவர்களைக் கொண்டு என்.சி.சி படை மற்றும் முறையே 75 மாணவர்களைக் கொண்ட தேவஸ்தான விடுதி ஒன்றும் நாட்டு நலப் பணிக்குழு ஒன்றும் அறிக்கையாண்டில் செயலாற்றி வந்தன.

**<u>கல்வி நிதி (இடைநிலைக் கல்வி)</u>**

மாணவர்கள் அனைவருக்கும் கட்டணமின்றி இலவசமாக கல்வி போதிக்கப்பட்டு கல்வி உதவித் தொகையாக அரசிடமிருந்து எதுவும் பெறவில்லை. 01–04–1990ல் இருந்து அரசிடம் ஆசிரியர்கள் சம்பளம் பெறுகின்றனர்.

**13–6 <u>தனியார் கல்லூரிகள்</u>**

இந்நகரில் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தினரால் நகராட்சி எல்லையை அடுத்த மிக அண்மையில் சிவகிரிப்பட்டியில் ஆடவர்களுக்கான தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும், கலைக்கல்லூரி ஒன்றும் செவிப்புலனற்றோர் பள்ளி ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது. இத்துடன் நாதசுவரம், தவில் இவைகளுக்காக இரண்டு கல்லூரிகள் நடத்தப்பட்டு வருகிறது.

**<u>மருத்துவம்</u>**

**<u>14–1 முத்துலட்சுமி மருத்துவ வசதி மற்றும் மருத்துவமனைகள்</u>**

பழநி நகராட்சியில் கீழ்க்கண்ட சுகாதார மையங்களும் துணை மையங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| வ.எண். | வார்டு எண். | மருத்துவமனை பெயர் மற்றும் அமைவிடம் | படுக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 7 | அடிவாரம் – ஆண்டவன் பூங்கா ரோடு | இல்லை |
| 2. | 7 | தேரடிப் பகுதி துணை மையம் | இல்லை |
| 3. | 9 | பள்ளிவாசல் வீதி துணை மையம் | 1 |
| 4. | 9 | அண்ணாமலை மகப்பேறு மருத்துவமனை ரெட்கிராஸ் ரோடு | 1 |

அறிக்கையாண்டில் கர்ப்பிணித் தாய்மார்கள் மேற்படி மையத்தில் பயன்பெற்றுள்ளனர். தாய் சேய் நலப்பணிகள் கவனிக்கப்படுகிறது. கருவுற்ற தாய்மார்களுக்கு தடுப்பூசி போடுதல், குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி காசநோய்,தடுப்பூசி, தட்டம்மை தடுப்பூசி, இளம்பிள்ளை

வாதம், மாலைக்கண் நோய் தடுப்பு மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகிறது. மூனறு துணை மையங்களும் கீழ்க்கண்டுள்ள பணியாளர்கள் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகின்றனர்.

| **பணியின் பெயர்** | **மொத்தம்** | **பணியில் உள்ளவர்கள்** | | **பணியிடம் உள்ளவை** |
|---|---|---|---|---|
| மருத்துவ அலுவலர் | 1 | இல்லை | காலியாக உள்ளது | இல்லை |
| மகப்பேறு உதவியாளர்கள் | 7 | 2 | பணியிடம் காலியாக உள்ளது | 5 |
| மகப்பேறு ஆயாக்கள் | 7 | இல்லை | பணியிடம் காலியாக உள்ளது | 7 |
| இரவுக்காவலர் | 1 | இல்லை | – | – |
| | 16 | 2 | இல்லை | 14 |

**14–2 <u>சித்த மருத்துவமனை</u>**

புது தாராபுர பிரதான சாலையில் வார்டு எண்.7–ல் 1987ம் ஆண்டு நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் துவங்கப்பட்டு நல்ல முறையில் இயங்கிக் கொண்டு இருக்கிறது.

| | |
|---|---|
| மருத்துவ அலுவலர் | 1 |
| மருந்தாளுநர் | 1 |
| கடைநிலை ஊழியர் | 1 |

**<u>15– பொது சுகாதாரம்</u>**

**<u>15–1 துப்புரவு</u>**

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கீழ்கண்டுள்ள பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

| | |
|---|---|
| நகர் நல அலுவலர் | 0 |
| துப்புரவு ஆய்வாளர்கள் | 6 |
| துப்புரவு மேற்பார்வையாளர்கள் | 12 |
| லாரி ஓட்டுனர் | 9 |
| துப்புரவு பணியாளர்கள் | 134 |
| களபணி உதவியாளர்கள் | 1 |
| இளநிலை உதவியாளர்கள் | 2 |

**<u>15–2 துப்புரவு வேலை ஆட்களின் வாழ்க்கை வசதிகள்</u>**

துப்புரவு தொழிலாளர்களின் வாழ்க்கை தரம் அறிக்கையாண்டில் திருப்திகரமாக இருந்தது. தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டு அரசு நிர்ணயம் செய்த

குறைந்த வாடகையே பிடித்தம் செய்யப்பட்டு வரப்படுகிறது. அரசு ஆணைப்படி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு 2 ஜோடி சீருடைகளும் பெண்களுக்கு 2 சேலைகளும் ஜாக்கெட்டுகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பாதுகாப்பு உபகரணங்கள் தலைகவசம், முககவசம், ஒளிரூட்டும் சட்டை , மழை அங்கி , காலுறை , கையுறை, செருப்பு , கம்பூண்டு போன்றவை அறிக்கையாண்டில் துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**<u>15–3 துப்புரவுப் பணி</u>**

அறிக்கையாண்டில் 139 பொது சுகாதார தொழிலாளர்கள் 4 சுகாதார ஆய்வாளர்கள் 12 துப்புரவு மேற்பார்வையாளர்கள் பணியாற்றி வந்தனர்.

கண்காணிப்பில் நகரில் குப்பைகளை அகற்றியும் தெரு கால்வாய்கள் சுத்தப்படுத்தியும் நகர்ப்புறத்தை சுத்தமாக பராமரிக்கப்பட்டு வந்தது. குப்கைள் கீழ்கண்ட வண்டிகள் மூலமாக அகற்றப்பட்டது.

| வ.எண். | வண்டிகளின் வகைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | டிப்பர் லாரி | 4 |
| 2. | காம்பேக்டர் லாரி | 2 |
| 3. | தள்ளுவண்டிகள் | 125 |
| 4. | இரும்புக் குப்பை பெட்டிகள் | 117 |
| 5. | கழிவுநீர் உறிஞ்சும் லாரி | 1 |
| 6. | ஜே.சி.பி. வாகனம் | 2 |

**<u>15–4 திருவிழாக் கால துப்புரவு பணிகள்</u>**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட திருவிழாக்கள் பங்குனி உத்திரம், தைப்பூசம், திருக்கார்த்திகை, அக்னி நட்சத்திரம், சூரசம்ஹாரம் போன்ற திருவிழாக் காலங்களில் இரவு, பகலாக துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நகராட்சி ஆணையர், நகர்நல அலுவலர், துப்புரவு ஆய்வர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் நகர் முழுவதும் ஆய்வு செய்யப்பட்டு துப்புரவு பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மேலும், இத்திருவிழாக்காலங்களில் நகரின் முக்கிய பகுதிகள் அனைத்திலும் சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைத்து தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றது.

**<u>15–5 அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள்</u>**

உரிமங்கள் இவ்வாண்டில் வழங்கப்பட்டது. விதிமுறைகள் கடைப்பிடித்து துப்புரவு ஆய்வாளர்கள் மேற்பார்வைக்குப்பின் உரிமங்கள் வழங்கப்படுகிறது. உரிமங்கள் பெறாத

தொழில்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டு இத்தலைப்பின் கீழ் ரூ. 375302/– வசூலிக்கப்பட்டுள்ளது.

**15–6 உரக்கிடநகு**

வார்டு எண்.4ல் பெரியப்பா நகரில் நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட நகரளை எண்.1 நகரளவை வார்டு எண்.4 பிளாக் 49 இடத்தில் 24.05 ஏக்கரில் நகராட்சியில் குப்பை சேகரிக்குமிடம் மற்றும் உரக்கிடநகு அமைந்துள்ளது. நகரில் அனைத்து குப்பைகளும், இவ்வுரக்கிடஙகில் சேகரிக்கப்படுகிறது. தற்போது உரம் தயார் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குப்பைகள் டம்பிங் செய்யப்பட்டு வருகிறது. இவ்வளாகத்தில் உரக்கிடநகு எடை போட எடை மேடை அமைக்கப்பட்டுள்ளது. உரக்கிடங்கிற்கு செல்லும் முன்னர் குப்பைகள் எடைமேடைக்கு அனுப்பப்படுகிறது. குப்பைகள் மக்கும் குப்பைகள் மக்கா குப்பை எனப் பிரிக்கப்பட்டு உரம் தயாரிக்க முன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**15–7 ஆடு அடிக்கும் இடம்**

புது தாராபுரம் பிரதான சாலையில் நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் ஆடு அடிக்கும் சாலை உள்ளது. ஆடுகள் மீது நகராட்சி முத்திரை இட்டப்பிறகே ஆட்டு இறைச்சிகள் பொது மக்கள் விற்பனைக்கு செல்கிறது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு பொது ஏலத்தின் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் 2018–2019க்கு ரூ. 181919/- ஆகும்.

**15–8 சுடுகாடு இடுகாடு**

நகராட்சியால் 4 மயானங்கள் பராமரிக்கப்பட்டு வந்தது. அதில் இரயிலடி வார்டு எண்.9 சாலையில் உள்ள மயானம் கிருஸ்தவர்களுக்கும், இராஜாஜி சாலையில் வார்டு எண்.4ல் உள்ள மயானத்தை முகம்மதியர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு மயானங்களும் நகராட்சி எல்லைக்குள் உட்பட்டது. மற்ற இரண்டு மயானங்கள் நகராட்சி எல்லைக்கு வெளியே மேற்குப் பகுதியில் கோயம்புத்தூர் பிரதான சாலையில் சண்முகநதிக் கரையில் அமைந்துள்ளது. மற்றொன்று நககரின் தெற்குப் பகுதி பாலசமுத்திரம் பிரதானச் சாலையில் இராமநாதநகரில் அமைந்துள்ளது. பழநி நகராட்சி மற்றும் தொண்டு நிறுவனம் சார்பாக சிறப்பான முறையில் பிற நகராட்சிகளுக்கு முன்னோடியாக எரி மயானம் செயல்பட்டு வருகிறது.

**15–9 திடக்கழிவு மேலாண்மை**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை நகராட்சிப் பகுதியில் செயல்படுத்த அரசாணை எண்.159 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 21–12–2001ல் தெரிவித்த

அறிவுரையின்படி நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் இந்நகராட்சி பகுதியில் அனைத்து வீடுகளிலும், மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் என பிரித்து சுமார் 75 தள்ளு வண்டிகளில் ஏற்றி லாரி மற்றும் குப்பை வண்டிகள் மூலம் வீடுவீடாக குப்பை சேகரம் செய்து அதை இரும்பு குப்பை காம்பேக்டர் லாரியில் கொட்டி நகர் முழுவதும் வைத்து அவற்றை இலகு, கனரக கம்பேக்டர் லாரிகள் மூலம் எடுத்துச் சென்று உரக்கிடஙகில் எடை பார்க்கப்பட்டு சேமிக்கப்படுகிறது. தொழிலாளர்களைக் கொண்டு சேமித்து குப்பைகளை லாரிகளில் ஏற்றி உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு எடை பார்க்கப்பட்டு சேமிக்கப்படுகிறது. வீடுகளில் இருந்து குப்பைகளை நேரடியாகப்பெறப்பட்டு உரக்கிடஙகிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

**<u>15–10 திரையரங்குகள்</u>**

இந்நகராட்சி பகுதியில் பொது மக்கள் பொழுது போக்கு வசதிக்காக 6 எண்ணிக்கை திரையரங்குகள் தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது.

| வ.எண். | திரையரங்குகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ரமேஷ் | **2** |
| 2. | வள்ளுவர் | **2** |
| 3. | சந்தானகிருஷ்ணா | **1** |
| 4. | சாமி தியேட்டர் | **1** |
| | மொத்தம் | **6** |

**16. <u>புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்</u>**

புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் பழநி நகராட்சி பள்ளிகளில் 6 மையங்களும் கீழ்கண்டவாறு அமைந்துள்ளது.

| வ.எண். | வார்டு எண். | மையத்தின் பெயர் | 2018–2019ஆம் ஆண்டில் உணவு உண்ணும் பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 20 | கடைவீதி நடுநிலைப்பள்ளி | 65 |
| 2. | 32 | அடிவாரம் நடுநிலைப்பள்ளி | 100 |
| 3. | 25 | சண்முகபுரம் நடுநிலைப்பள்ளி | 120 |
| 4. | 7 | பாரதி ஆரம்ப பள்ளி | 46 |
| 5. | 3 | கீழ ரத வீதி பள்ளி | 60 |
| 6. | 28 | நகராட்சி மேல்நிலைப்பள்ளி | 250 |
| | | **மொத்தம்** | **641** |

**பணியாளர்கள் விவரம்**

அமைப்பாளர் – 4

சமையலர் – 3

உதவி சமையலர் – 5

----------

12

----------

மேலும் சத்துணவு உண்ணும் மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் முட்டை வாரத்தின் முதல் நாள் திங்கள், புதன் அன்று உருளைக்கிழங்கும், புதன் கிழமை பாசிப்பயிறும், வெள்ளிக் கிழமை சுண்டல் பயிறும் வழங்கப்பட்டு வருகிறது. மற்றும் பண்டிகை நாட்களில் இனிப்பு உருண்டையும், மாணவ, மாணவியர்களுக்கு புளியோதரை விஷேச உணவாக தயாரித்து உணவுடன் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் பணி புரியும் 6 துப்புரவு ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டு மையப் பணிகளை நன்கு கண்காணிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## 17. சந்தைகளும், திருவிழாக்களும்

தமிழ்நாட்டில் உள்ள திருத்தலங்களில் இந்நகர் முதன்மை பெற்று விளங்குகிறது. இத்திருத்தலங்களில் நாள்தோறும் பல ஆயிரக்கணக்கான யாத்ரீயர்கள் வந்து போகிறார்கள்.

மாதாந்திர கிருத்திகைக்கு மட்டும் சுமார் 50,000 யாத்ரீகர்கள் வந்து செல்கின்றனர். அத்துடன் வழக்கம் போல் உள்ளூர் மாரியம்மன் திருவிழாவும் நடைபெற்றது. நகரில் கீழ்கண்ட பெரிய திருவிழாக்களுக்கும், வருகை புரியும் யாத்ரீயர்களுக்கும், குடிதண்ணீர், சுகாதார, விளக்கு வசதிகள் நகராட்சியில் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. மலஜலம் கழிக்க ஆர்.சி.சி. கழிப்பறை மற்றும் தற்காலிக கழிப்பறைகள் தண்ணீர் வசதியுடன் வசதிகள் செய்யப்பட்டது.

1. சூரசம்ஹாரம்
2. திருக்கார்த்திகை
3. தைப்பூசம்
4. பங்குனி உத்திரம்
5. அக்னி நட்சத்திரம்

முக்கிய இடங்களில் தற்காலிக கூரைச் சாலைகள் போடப்பட்ட ( காலரா தடுப்பூசி, அம்மைக் குத்துக்கள் முதலிய சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரத் திருவிழாவிற்கு மட்டும் சுமார் 10 இலட்சம் முதல் 12 இலட்சம் யாத்ரீகள் வந்து செல்கின்றனர். அறிக்கையாண்டில் தைப்பூசம் பங்குனி உத்திரம் ஆகிய இரு திருவிழாக்களுக்கு யாத்ரீகர்களின் தேவைக்கேற்ப செய்து, யாத்ரீயர்களுக்கு திருப்தியுடன் தங்கி செல்ல ஏற்பாடுகள் செவ்வனே செய்யப்பட்டது.

மேலும் கூட்ட நெரிசலைத் தவிர்க்க இரவு, பகல் எந்த நேரமும் பேருந்துகள் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டது. யாத்ரீயர்களுக்கு, வசதி செய்து கொடுக்கம் பொருட்டு மத்தியப் பேருந்து நிலையத்தை நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் பரந்த விளையாட்டு மைதானத்தில் பங்குனி உத்திர திருவிழாவிற்கும், தைப்பூசத் திருவிழாவிற்கும் மாற்றப்பட்டது. செலவிடப்பட்ட மொத்த தொகையில் 75 விழுக்காடு பங்குத் தொகையாக அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் கொடுத்து வருகின்றது.

**18.** இரயில்நிலையம்

பழநி நகரில் தொடர்வண்டி நிலையம் ஒன்று மத்திய அரசால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையத்திற்கு மதுரை, திண்டுக்கல், கோவை, பாலகாடு கேரளா மாநிலம், இராமேஷ்வரம் ஆகிய ஊர்களுக்கு புகை வண்டிகள் வந்து செல்கின்றது. தற்போது குறுகிய பாதைகளாக உள்ள இரும்பு பாதை அகலப்பாதையாக மாற்றம் செய்யப்பட உள்ளது.

**19.** நவீன கட்டிட கழிப்பிடம் மற்றும் குளியலறை

இந்நகராட்சியில் கீழ்கண்ட இடங்களில் 5 கட்டணக் கழிப்பிங்கள் உள்ளன. **2018–2019** கட்டண கழிப்பிடம் மூலம் நகராட்சிக்கு கிடைத்த வருவாய் ரூ. **41,95,246/–** ஆகும். கழிப்பிடங்கள்

| வ. எண். | விவரம் | மொத்த வருவாய் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | பேருந்து நிலைய பழைய கட்டண கழிப்பிடம் | 1612958 |
| 2. | பேருந்து நிலைய புதிய கட்டண கழிப்பிடம் | 2153183 |
| 3. | ஆண்டவன் பூஙகா ரோடு AKMG லாட்ஜ் எதிர்புறம் உள்ள கட்டணக் கழிப்பிடம் | 282000 |
| 4. | பாளையம் கட்டண கழிப்பிடம் | 147105 |
| | மொத்தம் | **4195246** |

**2018–2019** ல் நடப்பு ஆண்டில் குத்தகை மற்றும் உரிம இனங்களின் மூலம் கிடைத்த வருவாய் விவரம் பின்வருமாறு.

**2018–2019**ல் கிடைத்த வருமானம் பின்வருமாறு

| வ. எண். | விவரம் | மொத்த வருவாய் |
|---|---|---|
| 1 | காந்தி தினசரி சந்தை | 3650000 |
| 2 | இட்டேரி ரோடு தினசரி சந்தை | 1054000 |
| 3 | ஆட்டடிச்சாலை | 170100 |
| 4 | சுற்றுலா வாகனம் கட்டணம் வசூல் | 28800000 |
| 5 | வ.உ.சி. பேருந்து நிலைய தலைசுமை விற்பனை உரிமம் | 210000 |
| 6 | பேருந்து நிலைய பொருள் பாதுகாப்பு அறை | 177502 |
| 7 | மரங்களின் மேல் பலன் அனுபவிக்கும் உரிமம் | 9450 |
| 8 | கோடைகால நீர்த்தேக்கத்தில் மீன்குஞ்சு வளர்க்கும் உரிமம் | 51500 |
| | மொத்தம் | 34122552 |

**21** அறிக்கையாண்டில் **2018–2019** வரி மற்றும் வரியற்ற இனங்களின் கேட்பு வசூல் மற்றும் நிலுவை

| இனம் | கேட்பு | | | வசூல் | | | நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| வரி இனங்கள் | | | | | | | | | |
| வரியில்லா இனங்கள் | | | | | | | | | |

பயன் தரக் கூடியவைகள்

பழநி நகராட்சி பராமரிக்கப்பட்டு கடைகள், சந்தைகள் மற்றும் இறைச்சிக் கொட்டகைகள் மற்றும் பெட்டிக் கடைகள் மூலம் கீழ்கண்ட ஆண்டில் வருமானம் பெற்றுள்ளது.

| வ. எண். | விவரம் | மொத்த எண்ணிக்கை | மொத்த வருமானம் ரூ. |
|---|---|---|---|
| 1 | திண்டுக்கல் ரோடு மேல்மாடி கடைகள் | 25 | |
| 2 | திண்டுக்கல் ரோடு அடித்தள கடைகள் | 25 | |
| 3 | காந்தி தினசரி வெளிக்கடைகள் | 15 | |
| 4 | அடிவாரம் சன்னதி ரோடு கடைகள் | 15 | |
| 5 | ஆண்டவன் பூங்கா ரோடு கடைகள் | 11 | |
| 6 | இராஜாஜி ரோடு கடைகள் | 4 | |
| 7 | காந்தி ரோடு கடைகள் | 8 | |
| 8 | நேருஜி ரோடு கடைகள் | 3 | |
| 9 | பழைய பேருந்து மற்றும் புதிய பேருந்து நிலைய கடைகள் | 102 | |
| 10 | தாராபுரம் ரோடு புதுக்கடை | 3 | |
| 11 | அடிவாரம் இட்டேரி ரோடு புதிய கடை | 15 | |
| 12 | பெட்டிக் கடைகள் | 22 | |
| | **மொத்தம்** | **248** | **194.63** |

**21–2** பலன் தரும் மரங்கள் **20–06–2017**

**2018–2019** ம் ஆண்டிற்கு நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடங்களில் உள்ள புளியமரங்கள் மற்றும் இதர மரங்களின் மேல் மகசூலினை அனுபவிக்கும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளிகள் விடப்பட்டதில் ரூ. **9450 /–** வருவாய் வந்துள்ளது.

மரங்கள் விவரம் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1. | தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது | – | –– |
| 2. | மாநில நெடுஞ்சாலையில் உள்ளது | – | 62 |
| 3. | நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட இடங்களில் உள்ள மரங்கள் | – | 191 |
| | | | ––– |
| | | | 253 |
| | | | ––– |

21–3 வரி வசூல் பிரிவு

வருவாய் அலுவலர் – 1, வருவாய் ஆய்வாளர் –2, வருவாய் உதவியாளர்கள்–8, உதவியாளர்–0, இளநிலை உதவியாளர்கள்–2 பேர் அறிக்கையாண்டில் பணியாற்றி வந்தனர்.

அறிக்கையாண்டில் வருடாந்திர வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் சொத்துவரி அரையாண்டிற்கு கீழ்க்கண்ட விவரப்படி வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பொதுக் காரியத்திற்காக | – | 3.5% |
| 2. | தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | – | 3.25% |
| 3. | கழிவறை வரி | – | 2.25% |
| 4. | விளக்கு வரி | – | 2.5% |
| 5. | கல்வி வரி | – | 2.5% |
| | | | ––– |
| | | | 14 % |
| | | | ––– |

22. பொதுக் குறிப்புகள்

இந்நகராட்சி இவ்வாண்டில் தனது வரம்புக்குட்பட்ட நிதி நிலைக்கு ஏற்ப மக்களுக்கு தேவையான நகர வசதிகளை அளிக்கப்பட்டுள்ளது. நகரத்தினை சுத்தமாக பராமரிக்கவும், தெருக்கள் மற்றும் விளக்குகள் பராமரிப்பதில் முழுமையான கவனம் செலுத்தப்படுகிறது.

23. கணினி மயமாக்குதல்

இந்நகராட்சி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் அலகு –II மற்றும் நகராட்சி நிதியின் மூலம் கணினிகள்–18, லேசர் பிரிண்டர்–9, டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர் –2 மற்றும் மின் தடையில்லா சாதனம் (UPS) கணினிகளுக்கான துணை சாதனங்களும் வாங்கப்பட்டுள்ளது. மேலும் கணினி அறையை குளிர் சாதன வசதியும் செய்யப்பட்டு உதவித் திட்ட அமைப்பாளர் கீழ் செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சி மின் ஆளுமையின் கீழ் 6 இனங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. (1) சொத்துவரி (2).குடிநீர் கட்டணம் (3) வரி மற்றும் வரியில்லா இனங்கள் (4) தொழில்வரி (5) நிதிக் கணக்கீடு (6) பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு

இந்நகராட்சியின் 1992–ஆம் ஆண்டு முதலான பிறப்பு, இறப்புப் பதிவுகள் கணினியில் பதியப்பட்டு உரிய சான்றிதழ்கள் அனைத்தும் கணினி மூலம் பிரிண்ட் போடப்பட்டு காலதாமதம் இல்லாமல் உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியின் சொத்துவரி, குடிநீர்க் கட்டணம் தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் பணம் கட்டுபவர்களுக்கு உடனுக்குடன் ரசீது வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 1992க்கு முந்திய ஆண்டு பிறப்பு இறப்பு பதிவுகளும் கணினியில் பதிவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திலிருந்தே Wan Connectivity பரந்த வலைத் தளம் மூலம் இந்நகராட்சியின் அன்றாடம் வசூல் குறித்த விவரங்களை அறிய முடியும். 123.63.242.116/ PALANI மூலமும் இந்த விவரங்கைள அறிய முடியும். இந்நகராட்சியின் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் உள்ள ஏல அறிவிப்புக்கள் http://www.tenders.tn.gov.in / இணைய தளம் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

அலுவலக கணினி இன்டர்நெட் இணைப்பின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. மின் அஞ்சல் (E-Mail) முகவரி Commr.palani@tn.gov.in ஆகும். இதன் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் இதர அலுவலகங்களுக்கு பதில்களை இ–மெயில் மூலங்ம அனுப்பப்பட்டு வருகிறது.

**உ)** இந்நகராட்சி நடப்பு நிதியாண்டில் நகராட்சி அசையும், அசையா சொத்துக்கள், கட்டிட அனுமதி மற்றும் அபாயகர தொழில் உரிமம் (D&O) ஆகியவையும் கணினியில் பதியப்பட்டு நகராட்சி முழுமைக்கும் படிப்படியாக கணினி மயப்படுத்தப்பட உள்ளது.

26. கடன்கள்

அரசிடமிருந்து நகர்மன்றம் வாங்கிய கடன்கள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய விபரம்

| வ. எண் | திட்ட விபரங்கள் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| | | மொத்தக் கடன் தொகைரூ. (இலட்சத்தில்) | திரும்ப செலுத்தப்பட்ட தொகைரூ. (இலட்சத்தில்) | திரும்ப செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை ரூ. (இலட்சத்தில்) |
| 1 | வ.உ.சி.பேருந்து நிலையம் | 82 | 27 | 55 |
| 2 | குடிநீர் விநியோகம் | 450 | – | 450 |
| | மொத்தம் | 532 | 27 | 505 |

27. தீயணைப்பு

இந்நகரின் தமிழ்நாடு அரசு தீயணைப்பு நிலையம் உள்ளது. நகராட்சியால் ஏதும் பராமரிக்கப்படவில்லை. அலுவலகக் கட்டிடத்தில் தீ தடுப்பு முன்னெச்சரிக்கையாக வாளியில் மணல், தண்ணீர் மற்றும் தீ தடுப்பு சாதனங்கள் வைக்கப்பட்டுள்ளன.

28. சிறு சேமிப்பு

அறிக்கையாண்டில் ரூ.100.00 இலட்சங்கள் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது.

29. தணிக்கை–2018–2019

2018–2019–ம் ஆண்டு தொடக்கத்தில் 1384 தணிக்கைத் தடைகள் நிலுவையாக இருந்தது. நீக்கம் செய்யப்பட்டது. 1011 ஆண்டு இறுதியில் 373 தணிக்கைத் தடைகள் நிலுவையாக உள்ளது.

30. பொது

அறிக்கையாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும் சுமூகமான நிலை இருந்தது. நகர்மன்றத் தலைவர், துணைத் தலைவர், ஆணையர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் மக்களின்

குறைகளைக் கேட்டறிந்து, அவற்றை உடனுக்குடன் சரி செய்தனர். நகராட்சிப் பணிகளும் சிறப்புடன் நடைபெறத் தேவையான நடவடிக்கையை மேற்கொண்டார்கள்.

நகராட்சிப் பொறியாளர் , நகரமைப்பு அலுவலர், மேலாளர், கணக்கர் மற்றும் வருவாய் அலுவலர், நகர்நல அலுவலர், நகரளவர் ஆகியோர்கள் தத்தமது கடமைகளையும், பணிகளையும் சிறப்புறச் செய்து நகராட்சிப் பணி நல்லமுறையில் நடைபெற உதவியாக இருந்தார்கள்.

நகராட்சியில் நிர்வாகம் செவ்வனே சீரிய முறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்கிய ஏனைய அலுவலர்களுக்கும் உரிய காலத்தில் அறிக்கைகள் அனுப்பவும், தணிக்கைத் தடைகளை நீக்கவும் நிர்வாகத்திறமை அதிகரிக்கவும், வரி வசூலில் தீவிரக் கவனம் செலுத்தி வசூலிக்கவும், உறுதுணையாக இருந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நிர்வாகம் நல்லமுறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்கிய திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
பழனி நகராட்சி